DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 119/2025**

**Deposition of LW4 examined as PW2** Dt. 07.07.2025

| | |
|---|---|
| Name | பாரதிமோகன் |
| Father's/Husband's Name | தங்கவேல் |
| Village | தர ஆய்வாளர், கன்னியாகுமரி |
| Taluk | |
| Age | 50/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 07.07.2025

(A1,A2 present)

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கன்னியாகுமரியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தில் தர ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.10.2023 ம் தேதி மயிலாடுதுறை சித்தர்காட்டில் உள்ள நுகர்பொருள் வாணிப கழகத்தில் தர ஆய்வாளராக பணியில் இருந்த போது மயிலாடுதுறை குடிமைபொருள் வழங்கல் குற்ற புலனாய்வு பிரிவு குற்ற எண். 64/2023 என்ற வழக்கில் கைப்பற்றபட்ட 35 கிலோ எடை கொண்ட 30 மூட்டைகள் மொத்தம் 1050 கிலோ போலீசாரால் ஒப்படைக்கப்பட்ட அரிசியினை குடோனில் வைத்து பெற்று கொண்டு அதற்கு ரசீது கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ரசீது நான் கொடுத்ததுதான். **அது அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி அரிசியில் இருந்து ஆய்வுக்காக மாதிரி எடுத்து மாதிரி எண் கொடுக்கப்பட்டு மயிலாடுதுறை மண்டல ஆய்வகம் முதல்நிலை மண்டல மேலாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

09.10.2023 அன்று காலை 11.00 மணிஅளவில் அரிசி மூட்டைகளை கொண்டு வந்தார்கள். 11.45 மணிக்கு நான் அவற்றைப் பெற்றுக் கொண்டு ரசீது கொடுத்தேன். மேற்படி அரிசி மூட்டைகள் எந்த தேதியில் எங்கு வைத்து கைப்பற்றப்பட்டது என்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. அது பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. அரிசி மூட்டைகள் எதுவும் நான் பெறவில்லை என்றாலும் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அரிசி மூட்டைகள் பெற்றுக் கொண்டதாக ரசீது மட்டும் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பொது விநியோக திட்டத்திற்கு வழங்கப்படும் அரிசி மூட்டைகள் எங்கள் குடோனில் உள்ளது என்றால் சரிதான். அந்த மூட்டைகளில் உள்ள அரிசியை தான் மாதிரிக்காக எடுத்து அனுப்பினேன் என்றால் சரியல்ல.

7/7/25

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

7.7.25

நீதித்துறை நடுவர் எ...

மயிலாடுதுறை